IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

O.S.NO.12/2019 P.W.3

| | | |
|---|---|---|
| NAME | - | S.PALANIRAJ |
| FATHER'S NAME | - | SOMASUNDARAM |
| VILLAGE | - | VELLORE |
| TALUK | - | VELLORE |
| CASTE | - | MUTHALIYAR |
| CALLING | - | HGA (ADMIN) LIC |
| RELIGION | - | HINDU |
| AGE | - | 50 |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1872 of the 23rd day of August 2021.

முதல் விசாரணை். சத்தியமாகச் சொல்கிறேன்.

நான் தற்போது எல்.ஐ.சி. ஆப் இந்தியா வேலூர் கோட்ட அலுவலகத்தில் உயர்நிலை உதவியாளராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்திலிருந்து எங்கள் அலுவலக கோட்ட மேலாளருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் அவர் சார்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டிருந்த கடன் எண்.73040023 என்ற கடனை டெல்லிபாய் மற்றும் பக்தவச்சலம் ஆகியோர் கூட்டாக பெற்ற கடனுக்காக அவர்கள் கொடுத்த கேட்பு மனு மற்றும் அதனை எங்கள் நிறுவனம் ஏற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.23ஆக குறியிடப்படகிறது. 28.02.1991 தேதியில் மேற்படி கடனில் கூடுதலாக பெற்ற தொகைக்கான கடன் கேட்பு மற்றும் ஏற்பு கடிதத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.24ஆக குறியிடப்படுகிறது. மேற்படி கடன்கள் அடமானக் கடனாகவும் வீடு கட்டுவதற்காக மூலப்பத்திரங்களை அடமானம் வைத்ததன் மூலம் கொடுக்கப்பட்ட கடன்கள். மேற்படி கடன்களை அவர்கள் செலுத்தாததால் வேலூர் சார்பு நீதிமன்றத்தில் நாங்கள் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் 26.10.2004

தேதியில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி மேற்படி கடனுக்கான அசல், வட்டி மற்றும் நீதிமன்ற செலவுகள் ஆகியவை சேர்த்து ரூ.1,52,178/- அதில் ரூ.47,178/- தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு மீதியுள்ள தொகையான ரூ.1,05,000/- 31.03.2008 தேதியில் செலுத்தப்பட்டதாக முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கடனுக்கான தொகைகள் அனைத்தையும் பக்தவச்சலம் என்பவர் தான் செலுத்தினார். (அவ்வாறு செலுத்தியதற்கான விவரங்கள் நேரடியாக சாட்சிக்கு தெரியும் என்பதற்கு சாட்சியம் இல்லை என்று ஆட்சேபனை செய்யப்பட்டது). சாட்சி கடன் செலுத்திய விவரங்கள் மற்றும் தள்ளுபடி செய்யப்பட்ட தொகைக்கான விவரங்களை அலுவலக குறிப்பில் எழுதி வைத்தேன். பக்தவச்சலம் கடன் செலுத்த வேண்டுமென்று பலமுறை நேரில் சென்று அறிவுறுத்தியுள்ளேன். கடன் தொகைகள் முழுவதும் பெறப்பட்டது என்பதற்கான 31.03.2008 தேதியிட்ட அலுவலக குறிப்பின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.25ஆக குறியிடப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.